செ.வெ.எண்: 13 நாள்: 06.09.2021

**பத்திரிக்கைச் செய்தி**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பத்திரிக்கை செய்தி எண். 664 நாள்.30.08.2021 மற்றும் அரசாணை (நிலை) எண்.765 பொது (சட்டம் (ம) ஒழுங்கு.பி)த்துறை நாள்.30.08.2021 இன்படி, 15.09.2021 வரை கொண்டாடப்பட்டுள்ள சமய விழாக்களின்போது கீழ்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

i. தற்போதுள்ள கொரோனா பரவல் சூழ்நிலையை கருத்தில்கொண்டு, சமய விழாக்களை முன்னிட்டு மத சார்பான ஊர்வலங்கள், திருவிழாக்கள் நடத்த தடை உள்ளது மற்றும் பொது இடங்களில் உறியடி உள்ளிட்ட விளையாட்டுகளை நடத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ii. விநாயகர் சதுர்த்தி விழா தொடர்பாக பொது இடங்களில் சிலைகளை நிறுவுவது அல்லது பொது இடங்களில் விழா கொண்டாடுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அது போன்று சிலைகளை ஊர்வலமாக எடுத்துச்செல்வதற்கும், நிர்நிலைகளில் சிலைகளை கரைப்பதற்கும் அனுமதி இல்லாத நிலையில், இது போன்ற சமய விழாக்களை பொது மக்கள் தங்களது இல்லங்களிலேயே கொண்டாடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

iii. விநாயகர் சதுர்த்தி விழா தொடர்பாக தனி நபர்கள் தங்களது இல்லங்களில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபடவும் தனிநபர்களாக சென்று அருகிலுள்ள நீர்நிலைகளில் சிலைகளை கரைப்பதற்கும் அனுமதிக்கப்படுகிறது.

iv. மேற்குறிப்பிட்ட அனுமதி தனி நபர்களுக்கு மட்டும் பொருந்தும். அமைப்புகள் இச்செயல்பாடுகளில் ஈடுபடுவது முழுவதுமாக தடைசெய்யப்படுகிறது.

v. தனிநபர்கள் தங்களது இல்லங்களில் வைத்து வழிபாடு செய்யப்பட்ட சிலைகளை ஆலயங்களின் வெளிப்புறத்திலோ / சுற்றுப்புறத்திலோ வைத்துசெல்வதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இச்சிலைகளை பின்னர் முறையாக அகற்றுவதற்கு இந்து சமய அறநிலையத்துறையால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

vi. தற்போது நடைமுறையில் உள்ள சமூக இடைவெளியினை கடைபிடித்தல் மற்றும் இதர கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு மேற்குறிப்பிட்டுள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

(த.பி.பா)

vii. இவ்வனுமதி தனிநபர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதால் மேற்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை எவ்வகையிலேனும் மீறுபவர்கள் மீது சட்டப்பூர்வமான தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

viii. இந்த விழாவிற்கான பொருட்கள் வாங்க கடைகள் மற்றும் சந்தைகளுக்குச் செல்லும் பொதுமக்கள் தவறாது முகக்கவசம் அணிவதோடு, அவ்விடங்களில் பொருட்கள் வாங்க நிற்கும்போதும், சமூக இடைவெளியினை கட்டாயம் கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ix. வேளாங்கண்ணி மற்றும் இதர இடங்களில் கிறிஸ்தவ சமயத்தாரால் கொண்டாடப்படவுள்ள மரியன்னையின் பிறந்த நாள் திருவிழாவின்போது, பொது இடங்களில் மக்கள் கூடுவதற்குத் தடைவிதிக்கப்படுகிறது.

எனவே, நாகப்பட்டினம் மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி பொது வழிபாடு-ஊர்வலம் நடத்திடவும், அமைப்புகளாகச்சென்று நீர்நிலைகளில் மற்றும் கடற்கரைகளில் சிலைகளை கரைப்பதற்கும், மேலும் மரியன்னை பிறந்த நாள் வழிபாட்டிற்கு பொது இடங்களில் கூடுவதற்கும் அனுமதி இல்லை என்றும், கொரோனா பெருந்தொற்று பரவலை தடுக்க மாவட்ட நிர்வாகம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு பொது மக்கள் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**